FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

UNDER SECTION 173 BNSS முதல் தகவல் அறிக்கை
BNSS பிரிவு 173-ன் கீழ் (~~Under Section 154 Cr.P.C.~~) (~~கு.ந.வி.தொ. பிரிவு 154 இன் கீழ்~~)

C 8081623
03/AC/2025

1. District : மாவட்டம் கரூர் PS: கா.த.க. பிரிவு காவல்நிலையம் Year: 2025 ஆண்டு FIR No.: முதஅ. எண் Date: நாள் 01.09.2025

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION ACT 1988 [AS AMENDED IN 2018] Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7(a)
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 29.8.25 Date to : நாள் வரை மதியம் சுமார் 3½ மணிக்கு பிறகு

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 30.8.25 Time to : நேரம் வரை மதியம் சுமார் பொழுது மாலை மற்றும் 2¼ மணிக்கு சற்றுமுன்

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.09.25 Time : நேரம் அலுவலகத்தில். 08.00 HRS

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 01.09.25 Time : நேரம் 08.30 HRS

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கோரிக்கையின் பேரில் தயாரிக்கப்பட்ட புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 40.கி.மீ தெற்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வாதியின் விவசாய நிலத்தில், தெலிபோன் டவர் மற்றும் அதனை அலுவலகம், மைலம்பட்டி. கடவூர் தாலுக்கா.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. வின்சென்ட் பர்னபாஸ் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சிகாயராஜ்.

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1993 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி க.எண். 2/58, பண்ணைபட்டி கிராமம், P. உடையாப்பட்டி அஞ்சல், கடவூர் தாலுக்கா, கரூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. சிராஜுதீன் @ இலை அனைவர் சார் ஆயிவாளர், மைலம்பட்டி. கடவூர் தாலுக்கா. கரூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) –

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு –

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் –

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கணினியில் தட்டச்சு செய்து தனித்தாள்
இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முத.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. Christ bamba 01/09/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

P. [illegible] 01.09.2025

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

01.09.2025 AT 10.00 HRS

Name: பெயர் P.தங்கமணி
Rank: நிலை ..... No. எண் .....
ஆயுதவானர். 2ஆம் நிலை காவலர்
கருப்பி

Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.03/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018.

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் P.தங்கமணி ஆகிய நான் 01.09.2025 ஆம் தேதி காலை சுமார் 08.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது S.வின்சென்ட் பர்னபாஸ், த/பெ சகாயராஜ், 2/58 பண்ணப்பட்டி கிராமம், P.உடையாப்பட்டி அஞ்சல், கடவூர் தாலுகா, கரூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்த எழுத்து மூலமான புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் - S.வின்சென்ட் பர்னபாஸ், த/பெ சகாயராஜ், 2/58 பண்ணப்பட்டி கிராமம், P.உடையாப்பட்டி அஞ்சல், கடவூர் தாலுகா, கரூர் மாவட்டம். பெறுநர் - உயர்திரு. இன்ஸ்பெக்டர் அவர்கள், விஜிலன்ஸ் துறை, கரூர் மாவட்டம். அய்யா, நான் கரூர் மாவட்டம் கடவூர் தாலுகா பண்ணப்பட்டி கிராமத்தில் என் மனைவி, மற்றும் பெற்றோருடன் வசிக்கிறேன். நான் டிப்ளமோ படித்துவிட்டு திருச்சியில் உள்ள தனியார் நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிந்தேன். எனது அப்பாவிற்கு எங்கள் ஊரான பண்ணப்பட்டி கிராம சர்வே எண்கள் 244/2B, 244/3, 244/7B, 244/8B, 244/6, 243/4A1, 243/4A2, 243/4A3, 243/2A-ல் அடங்கிய 2 ஏக்கர் 84 ½ சென்ட் விவசாய நிலத்தை 29.10.2020 அன்று எனது தாத்தா பெர்க்மான்ஸ் அவர்கள் எனது அப்பா சகாயராஜ் பெயரில் தரகம்பட்டி சார் பதிவாளர் அலுவலக ஆவண எண் 2938/2020-ன் கீழ் தான செட்டில்மெண்ட் பதிவு செய்து கொடுத்தார். தற்போது என் அப்பாவுக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் நான் மேலாளர் வேலையை விட்டுவிட்டு எனது அப்பாவின் நிலத்தில் விவசாயம் செய்து வருகிறேன். எங்கள் நிலம் தற்போது கூட்டு பட்டாவாக உள்ளது. எனவே, எனது அப்பா பெயரில் தனிப் பட்டா வேண்டி கடந்த வருடம் இரண்டு முறை ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்தோம். ஆனால் தனிப்பட்டா மாறுதல் உத்தரவு கிடைக்கவில்லை. எனவே, கடந்த 18.07.2025 அன்று எங்கள் ஊருக்கு அருகில் உள்ள கோவில்பட்டி கிராமத்தில் நடந்த தமிழக முதல்வர் அவர்களின் "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் எனது தந்தை பெயரில் எழுத்து மூலமான விண்ணப்பம் கொடுத்தோம். அதன்பிறகு, எனது அப்பா பெயரில் தனிப்பட்டா கேட்டு விவசாய நிலத்தின் தான செட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் வில்லங்க சான்று, கூட்டு பட்டா நகல் ஆகியவற்றுடன் நான் 21.07.2025 அன்று இ-சேவை மையத்தில் ஆன்லைன் மூலம் விண்ணப்பித்தேன். ஆனால் எனது தந்தையின் விண்ணப்பித்தின் மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் நான் மைலம்பட்டி சர்வேயர் ஆபிசுக்கு நேரில் சென்று அங்கிருந்தவர்களிடம் கேட்டபோது சர்வேயர் ப்ரியா அவர்கள் லீவில் சென்றுவிட்டதாகவும், தற்போது சரளாக்சன் என்ற நில அளவை சார் ஆய்வாளர், சர்வேயர் பொறுப்பில்

இருப்பதாகவும் தெரிவித்தார்கள். இந்நிலையில், கடந்த 29.08.2025 அன்று காலை சுமார் 7 ¼ மணிக்கு நான் வீட்டிலிருந்த போது 98422 73145 என்ற செல்போன் எண்ணிலிருந்து எனது 95858 51538 என்ற செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்டு சர்வேயர் சரளாக்சன் பேசுவதாகவும், அவர் நிலத்தை அளக்க அன்று மதியம் வருவதாகவும் அதனால் ரெடியாக இருக்கும்படியும் என்னிடம் தெரிவித்தார். அன்று மதியம் சுமார் 3 ½ மணிக்கு சர்வேயர் திரு. சரளாக்சன் மற்றும் அவருடன் இரண்டு நபர்கள் நேரில் வந்து எங்கள் நிலத்தை பார்வையிட்டு அளவீடு செய்தார்கள். பின்னர் உங்கள் நிலம் பல சர்வே எண்களுடன் உள்ளதால் எங்களுக்கு வேலை ஜாஸ்தியாக இருக்கிறது என்றும் உனது அப்பா பெயரில் தனிப்பட்டா வழங்க ஏற்பாடு செய்வதற்கு அவருக்கு ரூ.10,000/- தனியாக கொடுக்குபடியும், அவ்வாறு கொடுத்தால்தான் உட்பிரிவு கோப்பு தயார் செய்து அனுப்பி எனது தந்தை பெயரில் தனிப்பட்டா கிடைக்க ஏற்பாடு செய்வேன் என்றும் அவர் கூறினார். மேலும், அவர் கேட்ட பணம் ரூ.10,000/-த்துடன் 30.08.2025 அன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு மைலம்பட்டி சர்வேயர் ஆபிஸிற்கு வந்து அவரைப் பார்க்கும்படி என்னிடம் சொன்னார். அதற்கு, நான் அவரிடம், அப்பாவிற்கு உடல்நிலை சரியில்லை என்றும், நானும் வேலைக்கு போவதில்லை என்றும், விவசாயத் தொழில் வருமானம் இல்லாமல் மிகவும் சிரமமாக உள்ளதாகவும் சொல்லி அவ்வளவு பணத்தை என்னால் கொடுக்க முடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் எதுவாக இருந்தாலும் நாளை காலையில் மைலம்பட்டி சர்வேயர் ஆபீசுக்கு நேரில் வா, அங்கு பேசிக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டு கிளம்பிவிட்டார். எனக்கு தோட்டத்தில் வேலை இருந்ததால் என்னால் அவர் சொன்னபடி 30.08.2025 அன்று காலை சர்வேயர் சரளாக்சன் அவர்களை அவரது ஆபிசுக்கு போய் சந்திக்க முடியவில்லை. இந்நிலையில் அன்று காலை சுமார் 11 ¾ மணிக்கு சர்வேயர் 86100 47116 என்ற மற்றொரு செல்போன் எண்ணிலிருந்து எனது செல்போன் எண் 95858 51538-க்கு தொடர்பு கொண்டு தான் மைலம்பட்டி சர்வேயர் சரளாக்சன் பேசுவதாகவும், ஸ்கெட்ச் போடவேண்டுமென்றும் சொல்லி உடனே மைலம்பட்டியில் உள்ள தனது ஆபிசுக்கு வருமாறும் சொன்னார். நான் உடனே செல்லாததால் அவர் தொடர்ந்து நான்கு ஐந்து தடவை 86100 47116 என்ற செல்போன் எண்ணிலிருந்து என்னை தொடர்பு கொண்டு அவர் கேட்ட பணத்துடன் உடனே வருமாறு சொன்னார். அதன்பேரில் நான் 30.08.2025 அன்று மதியம் சுமார் 2 ¼ மணிக்கு மைலம்பட்டி சர்வேயர் ஆபீசுக்கு சென்று அங்கிருந்த சர்வேயர் திரு. சரளாக்சன் அவர்களை நேரில் சந்தித்த போது, அவர் என்னிடம் நான் கேட்ட பணம் ரூ.10,000/- கொண்டு வந்துள்ளாயா என்று கேட்டவுடன் நான் அவரிடம் தற்போது என்னிடம் பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் நான் சொன்னது உனக்கு புரியவில்லையா, கேட்ட பணம் கொடுத்தால் தான் உன் அப்பா பெயரில் உட்பிரிவு கோப்பு தயார் செய்து உயரதிகாரிகளுக்கு அனுப்பி பட்டா மாறுதல் உத்தரவு பெற்றுத்தர ஏற்பாடு செய்ய முடியும், இல்லையென்றால் நீ இப்படியே அலைந்து கொண்டே இருக்க வேண்டியதுதான் என்று

சொன்னார். நான் அவரிடம் எனது கஷ்ட நிலையை மீண்டும் சொல்லி, ரூ.10,000/- பணம் என்னால் தர முடியாது என்று கூறினேன். அதற்கு அவர் உனக்காக நான் வேண்டுமானால் பணத்தைக் குறைத்துக் கொள்கிறேன், நீ ரூ.4000/- கொடுத்தால்தான் தனிப்பட்டா உத்தரவு கிடைக்கும் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். மேலும், 2-ம் தேதியன்று சர்வேயர் திருமதி. ப்ரியா அவர்கள் விடுப்பு முடிந்து வருவதால், அதற்கு முன்னரே தான் கேட்ட ரூ.4,000/-த்துடன் 01.09.2025 திங்கள்கிழமை அன்று நேரில் வந்து அவரைப் பார்க்குமாறு சொன்னார். ஆனால், அரசு இலவசமாக வழங்கும் சேவைக்காக திரு.சரளாக்சன் அவர்களுக்கு ரூ.4,000/- லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனக்கு தோட்டத்தில் வேலை இருந்ததால் என்னால் உடனே வந்து புகார் கொடுக்க இயலவில்லை. எனவே எனது அப்பா பெயரில் தனிப்பட்டா மாறுதல் உத்தரவு வழங்க ஏற்பாடு செய்வதற்கு என்னிடம் ரூ.4,000/- லஞ்சம் கேட்கும் மைலம்பட்டி நில அளவை சார் ஆய்வாளர் திரு.சரளாக்சன் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- XXXXXXXXXX (S.வின்சென்ட் பர்னபாஸ்) 01/09/2025.

Sir, Received the complaint on 01.09.2025 at about 08.00 hrs,. A Confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be true and the reputation of the accused was bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.No.03/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 at 08.30 hrs on 01.09.2025. Sd/-(xxxxxxxx) 01.09.2025. P.Thangamani, Inspector of Police, V&AC, Karur.

Original FIR along with the original Computer typed complaint of Tr.S.Vincent Barnabass (31/25), S/o. P.Sagayaraj, D.No.2/58, P.Udayapatty, Pannapatti Village, Tharagampatty, Kadavur Taluk & Karur District are submitted to the Hon'ble Principal District and Sessions Judge / Special Court, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

(P.Thangamani)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.